1992 ஜனவரி 30]

15—

நன்னிலம் தொகுதியில் வீட்டுவசதிப் பிரிவை அமைத்தல்.

* 3275—டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதியில் பல அலுவலகங்கள் இருப்பதால் வீட்டு வசதி வாரியம் ஒரு வீட்டுவசதிப் பிரிவை Housing unit ஏற்படுத்தி வாடகைக்கு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தாலுக்கா தலைமையிடமாக இருந்தும் கூட பல்வேறு அலுவலர்கள் கும்பகோணத்திலிருந்தும், நாகப் பட்டிணத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும், மயிலாடுதுறை யிலிருந்தும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போதுமான பேருந்து வசதிகள் இல்லாமல் இருப்பதால் அவர்கள் அலுவலகத் திற்கு வருவதற்கு காலதாமதமும், திரும்ப முன்கூட்டியே வீட்டுக்கு சென்று விடுகின்ற சூழ்நிலையும் இருக்கிறது. மேலும் நன்னிலத்தில் வீட்டுவசதிப் பிரிவு இல்லாமல் இருப்பதால் இருக்கிற சின்ன வீடுகளில் அதிகமான வாடகைக் கொடுத்து வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, வரும் நிதி ஆண்டி லாவது அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்றால் அந்தப் பகுதி வருவாய்க் கோட்டப் பிரிவிற்குள் வரவேண்டும். நன்னிலம் பகுதியைப் பொறுத்தவரையில் அது வருவாய்க் கோட்டப் பிரிவிற்குள் வராத காரணத்தால் அங்கு இந்தத் திட்டம் செயல் படுத்த இயலாது. மேலும் நன்னிலம் பகுதிக்கு என்று வீட்டுவசதிப் பிரிவு செயற்படுத்த முடியாத நிலையில்

இருக்கிறது. ஏற்கனவே, தஞ்சை நகரில் மன்னார்குடி, கும்ப கோணம், திருவாரூர், மயிலாடுதுறை போன்ற நகரப் பகுதிகளை உள்ளடக்கி ஒரு பிரிவு உருவாக்குவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, தற்போது சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **வினா எண் 16. திரு. ஆ. கு.** சீனிவாசன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

16—

தாலுகா பகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 3585—**திரு. ஆ. கு. சீனிவாசன் :**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமங்களில் போதுமான வேலைவாய்ப்பு இல்லாத தால் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பு கருதி நகரங்களுக்குச் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை தடுக்க தாலுகா, பிர்க்கா பகுதியில் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. முஹமது ஆசிப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு, அதற்கான போதிய விண்ணப்பங்கள் அல்லது கோரிக்கைகள் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் பெறப்படின் அதனை ஆராய்ந்து தக்க தொழிற்பேட்டைகளை சிட்கோ நிறுவனம் அமைக்கும்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் பெரணமல்லூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் எந்தவித வசதியும் இல்லாமல் இன்னும் பின் தங்கியிருக்கின்ற காரணத்தால் எங்கள் பகுதிக்கு சென்ற பட்ஜெட்டில் அடிப்படை வசதி...